بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *30/05/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**நாம் கிலாஃபத்துடன் இணைந்திருக்க வேண்டும். மேலும், கிலாஃபத் அமைப்பை நிலைபெறச் செய்வதற்காக எல்லாத் தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்.**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿١﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿٢﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿٣﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿٤﴾

اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿٥﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿٧﴾

وَاَقۡسَمُوۡا بِاللّٰهِ جَهۡدَ اَيۡمَانِهِمۡ لَئِنۡ اَمَرۡتَهُمۡ لَيَخۡرُجُنَّ ؕ قُلۡ لَّا تُقۡسِمُوۡا ۚ طَاعَةٌ مَّعۡرُوۡفَةٌ ؕ اِنَّ اللّٰهَ خَبِيۡرٌۢ بِمَا تَعۡمَلُوۡنَ ﴿٥٤﴾

قُلۡ اَطِيۡعُوا اللّٰهَ وَاَطِيۡعُوا الرَّسُوۡلَ ۚ فَاِنۡ تَوَلَّوۡا فَاِنَّمَا عَلَيۡهِ مَا حُمِّلَ وَعَلَيۡكُمۡ مَّا حُمِّلۡتُمۡ ؕ وَاِنۡ تُطِيۡعُوۡهُ تَهۡتَدُوۡا ؕ وَمَا عَلَى

الرَّسُوۡلِ اِلَّا الۡبَلٰغُ الۡمُبِيۡنُ ﴿٥٥﴾ وَعَدَ اللّٰهُ الَّذِيۡنَ اٰمَنُوۡا مِنۡكُمۡ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسۡتَخۡلِفَنَّهُمۡ فِى الۡاَرۡضِ كَمَا اسۡتَخۡلَفَ

الَّذِيۡنَ مِنۡ قَبۡلِهِمۡ ۖ وَلَيُمَكِّنَنَّ لَهُمۡ دِيۡنَهُمُ الَّذِى ارۡتَضٰى لَهُمۡ وَلَيُبَدِّلَنَّهُمۡ مِّنۡۢ بَعۡدِ خَوۡفِهِمۡ اَمۡنًا ؕ يَعۡبُدُوۡنَنِىۡ لَا يُشۡرِكُوۡنَ بِىۡ

شَيۡـًٔا ؕ وَمَنۡ كَفَرَ بَعۡدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الۡفٰسِقُوۡنَ ﴿٥٦﴾ وَاَقِيۡمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَاَطِيۡعُوا الرَّسُوۡلَ لَعَلَّكُمۡ تُرۡحَمُوۡنَ ﴿٥٧﴾

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பு நிலைபெற்று 117 ஆண்டுகள் கழிந்து விட்டன. இந்த அமைப்பு 1908 இல் நிலைபெற்றது. அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கும் ஏற்பவே நிலைபெற்றது. எனவே, நாம் அல்லாஹ் முன்னறிவித்த ஓர் அமைப்பின் அங்கமாக இருப்பது அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத் மீது புரிந்துள்ள பேரருளாகும். ‘மஹ்தி மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்ததும், எத்தகைய ஒரு காலகட்டம் துவங்கும் என்றால், அது இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டமாக இருக்கும். பிறகு, இந்த அமைப்பிலேயே கிலாஃபத்தின் காலகட்டமும் துவங்கும்’ என்பதே அந்த முன்னறிப்பாகும்.

**அதைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் தெள்ளத்தெளிவாக இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளார்கள்:** “அல்லாஹ் நாடும் வரை உங்களில் நுபுவ்வத் நிலைபெற்றிருக்கும். பிறகு, அவன் அதை எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் நிலைபெறும். பிறகு, அல்லாஹ் நாடும்போது அந்த அருட்கொடையையும் எடுத்துக் கொள்வான். பிறகு, அவனது நியதிக்கு ஏற்ப கொடுங்கோல் ஆட்சி நிலைபெறும். இந்தக் காலகட்டம் முடிவடைந்ததும், அதையும் விடப் பெரிய

பலவந்தமான ஆட்சி நிலைபெறும். அது அல்லாஹ் நாடும் வரை இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். அதற்குப் பிறகு, மீண்டும் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் நிலைபெறும்." இதைக் கூறிவிட்டு மாநபி (ஸல்) அவர்கள் மௌனமாகி விட்டார்கள். இது மாநபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாக இருந்தது. இதன்படி அல்லாஹ்வின் அருளால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்ததும், இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான ஒரு புதிய காலகட்டம் துவங்கியது. அன்னாரது மறைவிற்குப் பிறகு, கிலாஃபத் காலகட்டமும் துவங்கியது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தாம் துவக்கத்தில் ஓதிய வசனங்களின் மொழியாக்கத்தை முன் வைத்த பிறகு இவ்வாறு கூறினார்கள்:* 'உங்களிடம் கிலாஃபத் அமைப்பு நிலைபெறும்' என்று அல்லாஹ் முஸ்லிம்களிடம் வாக்குறுதியளித்துள்ளான் என்பது இந்த வசனங்களிலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலம் 30 ஆண்டுகள் வரை இருந்தது. அல்லாஹ்வின் வாக்குறுதி ஒன்றும் 30 ஆண்டுகளுக்காக மட்டும் இருக்கவில்லை. மாறாக, இது ஒரு முழுமையான வாக்குறுதியாக இருந்தது. இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் விளக்கம் அளித்து விட்டார்கள். எனவே, அஹ்மதிகளாகிய நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வின் கட்டளைகள்படி அமல் செய்வதாக ஓர் உறுதி எடுத்துள்ளோம். ஆனால், அதற்கும் நிபந்தனைகள் உள்ளன. எனவே, அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதும் நமக்கு அவசியமாகும் என்பதை நான் நினைவில் கொள்ள வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "எனவே அன்பிற்குரியவர்களே! அல்லாஹ் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகிறான். இதுவே தொன்று தொட்டு அல்லாஹ்வின் நடைமுறையாக இருந்து வருகிறது......... நான் இறைவனிடமிருந்து வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டேயிருங்கள். இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்குவதற்காக, நல்லவர்களின் ஒவ்வொரு ஜமாஅத்தும் ஒவ்வொரு நாட்டிலும் ஒன்று சேர்ந்து துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும்."

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* அன்னார் இதைக் கூறியபோது, ஹிந்துஸ்தானில் ஜமாஅத் இருந்தது. ஒரு சில மக்கள் வெளியே இருந்திருப்பார்கள். ஆனால், 'ஒவ்வொரு நாட்டிலும் இவ்வாறு துஆ செய்து கொண்டேயிருங்கள்' என்று கூறி அன்னார் ஒருவகையில்,

‘உலகில் எல்லா இடங்களிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவிவிடக்கூடிய எதிர்காலம் வரும்’ என்ற இந்த முன்னறிவிப்பையும் செய்துவிட்டார்கள். இன்று நாம் அந்தக் காலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்! உலகத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவியிருக்கிறது. எல்லா இடத்திலும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வு, அன்பு, நேசம் ஆகியவற்றின் தொடர்பு நமக்குத் தென்படுகிறது. இனி எப்பொழுதும் இதன்படி அல்லாஹ் தனது அருள்களால் நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பான். ஏனெனில், இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும். எனவே, நாம் கிலாஃபத்துடன் இணைந்திருக்க வேண்டும். கிலாஃபத் அமைப்பை நிலைநாட்டுவதற்காக எல்லாத் தியாகங்களுக்காகவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**அஹ்மதிய்யா ஜமாஅத்திலும் கிலாஃபத் மன்னராட்சியாக மாறி விடும் என சில மக்கள் நினைக்கிறார்கள். இதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மிகவும் வலுவாக நிரகாரித்தார்கள்; வன்மையாக மறுத்தார்கள். மேலும், அன்னார் கூறினார்கள்:** ஆன்மிகமும், இறையச்சமும் இருக்கும்வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மன்னராட்சி வராது. இன் ஷா அல்லாஹுத் தஆலா.

அல்லாஹ்வின் அருளால், கிலாஃபத் அமைப்பு அல்லாஹ்வின் நாட்டப்படி நிலைபெற்ற ஓர் அமைப்பாகும். அதன்படியே தொடர்ந்து கொண்டே இருக்கும். எவ்வகையான உலக அரசாட்சியும் அதில் வராது. காலத்தின் கலீஃபாவோ தம் தொழுகைகளில், இரவுகளில் எழுந்து ஜமாஅத் மக்களுக்காக துஆ செய்கிறார். இவ்வாறு அமல் செய்யும் அரசர் எவரும் இருக்கிறாரா!? எனவே, இந்த விஷயத்தை நாம் நினைவில் கொண்டால், இதன்படி அமலும் செய்தால், பிறகுதான் நாம் வெற்றி பெற முடியும். கிலாஃபத் அமைப்பு எத்தகைய ஓர் அமைப்பு என்றால், அல்லாஹ்வே உள்ளங்களைத் திருப்புகிறான். இதுவே இறையுதவியாகும். எப்பொழுதும், எல்லா கிலாஃபத் காலத்திலும் நாம் இதைப் பார்த்துள்ளோம். இப்பொழுது நீங்கள் இன்று உலகத்தில் பார்த்துக் கொள்ளுங்களேன்! அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான் ஓர் அமைப்பில் கோர்க்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்துடன் இணைந்திருப்பதனால், கிலாஃபத்துடன் இணைந்திருப்பதனால், அவர்கள்மீது அல்லாஹ்வின் பெரும் அருள்கள் உள்ளன.

எதிரிகள் தரப்பிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்மீது எண்ணற்ற அநீதிகள் சரமாரியாக இழைக்கப்படுகின்றன என்பது சரிதான்; குறிப்பாக, பாக்கிஸ்தானிலும் மற்ற சில நாடுகளிலும் நடக்கின்றதுதான்; ஆனால், அல்லாஹ்வின் அருளால் அனைவரும் தம்முடைய ஈமானில் நிலைத்து நிற்கிறார்கள். எனவே, அவ்வாறிருந்தும், ‘இந்த இன்னல்களால் எங்களை எங்களது மார்க்கத்திலிருந்து விலக்கிட முடியாது; அதற்குப் பதிலாக அல்லாஹ் எங்கள்மீதும், எங்கள் வழித்தோன்றல்கள்மீதும் பொழியச் செய்யும் அருட்கொடை மழைக்கு நிகரே கிடையாது’ என்பதில் அவர்கள் நிலைத்திருக்கிறார்கள்.

எனவே, நாம் கிலாஃபத்தின் அருளால் உண்மையான அருளைப் பெற வேண்டுமென்றால், உண்மையான முறையில் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக வேண்டுமென்றால், பிறகு நாம் எல்லா விதமான ஷிர்க்கிலிருந்து, நமது அகந்தையிலிருந்து, ஆணவத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அதை விட்டும் நம்மை நாம் தூய்மைப்படுத்த வேண்டும். பிறகு, அல்லாஹ், 'இவர்கள் தொழுகையை நிலைநாட்டக்கூடியவர்கள் ஆவார்கள்; ஸகாத் செலுத்தக்கூடியவர்கள் ஆவார்கள்' என்று கூறியிருக்கிறான். ஒவ்வோர் அஹ்மதியும் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையை நினைவில் கொள்ள வேண்டும். தன்னை கிலாஃபத்துடன் இணைந்திருப்பவராகக் கருதுகின்ற, இணைந்திருக்க விரும்புகின்ற, அதிலிருந்து அருள் பெற விரும்புகின்ற ஒவ்வோர் அஹ்மதியும் நாம் தொழுகைகளை நிலைநாட்டுவதன் பக்கம் முழு கவனம் செலுத்த வேண்டும் என்ற விஷயத்தை முன்னிறுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் தொழுகைகளை நிலைநாட்டுவதற்கு விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் மிகவும் உன்னதமான முறையில் கூறுகிறார்கள்:** தொழுகையின் ஆகச் சிறந்த அம்சம் ஜுமுஆ ஆகும். அதில் இமாம் குத்பா வாசிக்கிறார்; அறிவுரைகளைக் கூறுகிறார். அதன் மூலமாக சமுதாய ஒருமைப்பாடும் ஒற்றுமையும் உருவாகிறது. காலத்தின் கலீஃபா அனைவரின் கிப்லாவையும் (திரும்பும் இடத்தையும்) ஒரு பக்கமாக வைக்கிறார்.

இன்றைய நாள்களில் நான் இஸ்லாமிய வரலாற்றைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறேன். அதிலும் நமக்கு அறிவுரைகளாக இருக்கும் பல விஷயங்கள் வந்து விடுகின்றன. மக்கள் அதிலிருந்து பெரிதும் பலன்பெறுகிறார்கள். இது மட்டுமின்றி, அவர்களுக்கு இஸ்லாமிய வரலாறு பற்றியும் தெரியவருகிறது. எனவே, இந்த கிலாஃபத்தான் அந்தப் பாலமாகும். அதை அல்லாஹ் நம்மிடம் உருவாக்கியிருக்கிறான். அதன் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஓர் அலகு உருவாகி விட்டது. உலகின் 215 நாடுகளில் வாழும் ஒவ்வோர் அஹ்மதியும் ஓர் அலகாகி இந்த அமைப்புடன் இணைந்திருக்கிறார். தன்னை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்கிறார். அல்லாஹ் ஸகாத் செலுத்துமாறும் கட்டளையிட்டுள்ளான். இதுவும் தம் செல்வத்தைத் தூய்மைப் படுத்துவதற்கு மிகவும் அவசியமாகும். இதில் மற்ற பொருள் தியாகங்களும் உள்ளன. இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாக மட்டுமே இந்த நிதியமைப்பு தொடர்வதை நாம் பார்க்கிறோம்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* எத்தகைய சில சூழ்நிலைகள் இருக்கின்றன என்றால், அதன் காரணமாக, சில இடங்களில் சில கடுமைகளும் ஏற்படுகின்றன. ஆனால், அஹ்மதிகள் அந்த எல்லா இன்னல்களையும் பார்த்தபிறகும், 'நம்மிடம் கிலாஃபத் அமைப்பு நிலைபெற்றிருக்கிறது; அது நமக்கு ஆறுதலும் அளிக்கிறது; நம்முடைய

தேவைகளையும் நிறைவேற்ற முயற்சி செய்கிறது' என்ற விஷயத்துக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்:** உலகில் பல பேரழிவுகள் வெளிப்படும். சிலவோ இயற்கை சீற்றத்தின் பேரழிவுகளாக இருக்கும். சில மனிதர்களின் சொந்தத் தவறுகளின் காரணமாக நிகழும். அதன் காரணமாக, போர்கள் நடக்கின்றன. குழப்பங்கள் உருவாகியிருக்கின்றன. அந்த மக்கள் இப்பொழுதும் அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால், பிறகு, உலகில் ஓர் அழிவு வரவிருக்கிறது. அதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பலமுறை முன்னறிவித்துள்ளார்கள்.

எனவே, நாம் உலகையும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இது கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பவர்களின் கடமையாகும். அதற்காக உலகை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வருவதற்கு முழு முயற்சி செய்யுங்கள். தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக உங்களால் இயன்ற அளவிலான வழிவகைகளையும் திறமைகளையும் பயன்பாட்டில் கொண்டு வாருங்கள். அதற்காக உயிர், பொருள், நேரம் ஆகியவற்றைத் தியாகம் செய்ய எல்லா நேரமும் ஆயத்தமாக இருங்கள்.

அவ்வாறே அல்லாஹ்வின் சிறப்பான அருள்கள் ஒவ்வோர் அஹ்மதி மீதும் ஏற்படும் வகையில் அல்லாஹ்வுடனான தன் தொடர்பைம் தானும் அதிகரித்திட வேண்டும். பிறகு, அவர் தன்னையும் தன் வழித்தோன்றல்களையும் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றிக் கொள்பவராக இருப்பார். ஏனெனில், இந்தப் பேரழிவுகளும் இந்த நாசங்களும் எவ்வளவு பயங்கரமான வடிவத்தை எடுத்துக் கொண்டே செல்கின்றன என்றால், இனி எப்படிப்பட்ட வடிவத்தை எடுக்குமோ என்று தெரியவில்லை! அதை மனிதன் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது. எனவே, அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இணைவதிலேயே இப்பொழுது உலகத்தின் நிலைபெற்றிருத்தல் இருக்கின்றது என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:-*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:** "சிலவற்றை எனது வாழ்விலும் சிலவற்றை எனக்குப் பிறகும் என, அல்லாஹ் என்னிடம் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றிடாத வரை இந்த உலகம் முடிவுக்கு வராது என்று என்னிடம் வாக்குறுதி அளித்துள்ளான்.

எனவே, நாம் இறைவனின் மகத்துவத்தை உள்ளங்களில் பதிய வைக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். செயல் ரீதியாக இறைவனின் ஓரிறைமையை வெளிப்படுத்துபவர்களாக, முழுமையான கட்டுப்படுதலுக்கான

முன்மாதிரியைக் காட்டுபவர்களாக ஆக வேண்டும். ஈமானில் முன்னேறிக் கொண்டே செல்பவர்களாக ஆக வேண்டும். இதுவே நம்மில் ஒவ்வொருவரின் பணியாகும்.

நம்மில் ஒவ்வொருவரும் அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைபெறச் செய்வதற்காக எல்லாத் தியாகங்களையும் செய்வதற்கு ஆயத்தமாக இருப்போமாக! நாம் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழிகளை நிறைவேற்றக்கூடியவர்களாக இருப்போமாக! உலகத்தில் அல்லாஹ்வின் ஓரிறைமையின் கொடி எல்லா இடத்திலும் பறப்பதையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் மக்கள் கூட்டங்கூட்டமாக வருவதையும், அவர்கள் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்படுபவர்களைச் சேர்ந்தவர்களாக ஆவதற்கு முயற்சி செய்யக் கூடியவர்களாக இருப்பதையும் நாம் காண்கின்ற காலத்தை அல்லாஹ் நம்முடைய வாழ்வில் கொண்டு வருவானாக! அல்லாஹ் நமக்கு இந்த அனைத்து விஷயங்களுக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

கிலாஃபத்துக்கு அல்லாஹ் அளித்துள்ள வாக்குறுதியின் பரக்கத்துகளால் இன்று நாம் பலனடைகின்றோம் என்று நாம் கூறும் அந்த நாள்தான் நமக்கு மிகப் பெரும் அருளுக்குரிய நாளாக இருக்கும். இந்த நாள்கள்தான் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றக்கூடிய நாள்களாக இருக்கும். அல்லாஹ் நமக்கு நம்மை சீர்திருத்திக் கொள்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைப்பதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இறுதியில் ரப்வாவின் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் நிர்வாகியான* ***மதிப்பிற்குரிய கர்னல் டாக்டர் பீர் முஹம்மத் முனீர் சாஹிப் அவர்கள்*** *மற்றும் தற்போது கனடாவில் முரப்பியாக இருக்கும் சமீயுல்லாஹ் ஸாஹித் சாஹிப் அவர்களின் துணைவியார்* ***மதிப்பிற்குரிய சலீமா ஸாஹித் சாஹிபா அவர்கள்*** *ஆகியோரின் ஜனாஸா காயிப் தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். மேலும், மர்ஹூம்களின் பாவமன்னிப்புக்காகவும், உயர்வான படித்தரத்திற்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)